# குடியரசு தின விழாவில் சிறப்புச் சேர்த்தோருக்கு - முதல்வர் விருது வழங்கிப் பாராட்டு!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.2.2026) தலைமைச் செயலகத்தில், 2026 குடியரசு நாள் விழாவில். பல்வேறு துறைகளின் சார்பில் அரசின் திட்டங்களை விளக்கி அணிவகுத்து வந்த அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கு இரண்டாம் பரிசிற்கான கேடயத்தை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, அவர்களிடம் வழங்கினார். இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பொதுத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், துணைச் செயலாளர் (மரபு) வீர் பிரதாப் சிங், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாவட்ட வருவாய் அலுவலர் வே. மணிகண்டன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.2.2026) தலைமைச் செயலகத்தில், 2026 குடியரசு நாள் விழாவில் நடைபெற்ற கல்லூரி மாணவிகளின் கலாச்சார நிகழ்ச்சிகளில் முதல் பரிசு பெற்ற சென்னை, கொளத்தூர், சோகா இகேதா கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவிகளுக்கு கேடயத்தை வழங்கி வாழ்த்தினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.2.2026) தலைமைச் செயலகத்தில், 2026 குடியரசு நாள் விழாவில் நடைபெற்ற பள்ளி மாணவிகளின் கலாச்சார நிகழ்ச்சிகளில் முதல் பரிசு பெற்ற சென்னை, பெருந்தலைவர் காமராஜர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவிகளுக்கு கேடயத்தை வழங்கி வாழ்த்தினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.2.2026) தலைமைச் செயலகத்தில், 2026 குடியரசு நாள் விழாவில் பல்வேறு துறைகளின் சார்பில் அரசின் திட்டங்களை விளக்கி அணிவகுத்து வந்த அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பில், காவல் துறைக்கு மூன்றாம் பரிசிற்கான கேடயத்தை உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், காவல்துறை தலைமை இயக்குநர் (பொறுப்பு) ஜி.வெங்கடராமன், இ.கா.ப., சென்னை மாநகர காவல் ஆணையர் ஆ.அருண், ஆகியோரிடம் வழங்கினார். இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பொதுத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், துணைச் செயலாளர் (மரபு) வீர் பிரதாப் சிங், ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.2.2026) தலைமைச் செயலகத்தில், 2026 குடியரசு நாள் விழாவில். பல்வேறு துறைகளின் சார்பில் அரசின் திட்டங்களை விளக்கி அணிவகுத்து வந்த அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பில், இந்து சமய அறநிலையத்துறைக்கு முதல் பரிசிற்கான கேடயத்தை இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு அவர்களிடம் வழங்கினார்.

### 6 சட்டமன்றத் தொகுதிகளில்

# ‘தமிழ்நாடு தலைகுனியாது’ - நான்காவது நாள் பரப்புரை!

## கழக வெற்றிக்கு - மக்கள் திரள் ஆதரவு!















**சென்னை, பிப்.7-**

**தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு திராவிட மாடல் அரசின் சாதனைகளை எடுத்துக் கூறுவதோடு, ஒன்றிய பா.ஜ.க. அரசும் அ.தி.மு.க. கூட்டணியும் தமிழ்நாட்டுக்கு செய்து வரும் துரோகத்தை தோலுரிக்கும் விதமாக தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரைக் கூட்டமானது கழகத்தின் சார்பில் தமிழ்நாடு முழுக்க நடத்தப்பட்டு வருகிறது.**

**கழகத் தலைவரது உத்தரவின் பேரில் நான்காம் நாள் பரப்புரையில் ஆறு சட்டமன்றத் தொகுதிகளில் தமிழ்நாடு தலைகுனியாது தேர்தல் பரப்புரை நடைபெற்றது.**

திருவைகுண்டத்தில் கம்பம் செல்வேந்திரன், கும்மிடிபூண்டியில் ஜெகத்ரட்சகன், வேளச்சேரியில் திருமதி. தமிழச்சி தங்கபாண்டியன், கீழ்பெண்ணாத்தூரில் சபாபதி மோகன், பவானிசாகரில் அந்தியூர் செல்வராஜ், அறந்தாங்கியில் பொன் முத்துராமலிங்கம் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

ஒன்றிய பா.ஜ.க. அரசின் பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கு ஒரு பைசா கூட ஒதுக்கப்படாமல் வஞ்சித்து வரும் பா.ஜ.க. - அ.தி.மு.க. கூட்டணியின் வஞ்சகத்தை பொது மக்கள் மத்தியில் எடுத்துரைத்தனர். அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணியால் தமிழ்நாடு பட்ட அவலத்தை பேச்சாளர்கள் சுட்டிக் காட்டியது, பட்ஜெட்டில் நிதி ஒதுக்காமல் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருவது ஆகியவற்றை எடுத்துக் கூறும் போது மக்களிடையே பெருத்த வரவேற்பு கிடைத்தது.

திராவிட மாடல் அரசின் திட்டங்களால் பயன்பெற்று வரும் பயனாளிகள், முக்கிய பிரபலங்கள், பெண்கள், இளைஞர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பு மக்களும் இப்பரப்புரை கூட்டத்தில் தன்னெழுச்சியாக கலந்து கொண்டனர். மேலும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் முதல் காலை உணவு திட்டம் வரை எதிர்க்கட்சிகளும் காப்பி அடிக்கும் வகையிலான சிறப்பான திட்டங்களை நமது முதலமைச்சர் செயல்படுத்தி தமிழ்நாட்டை வளர்ச்சிப்பாதையில் பயணிக்கச் செய்து வருவது பற்றி விரிவாக புள்ளி விவரங்களுடன் எடுத்துரைக்கப்பட்டது அனைவராலும் கவனிக்கப்பட்டது.